442

உ

சிவமயம்

வந்தேமாதரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 APR 1938
MADRAS

2808



மில் தொழிலாளர் சங்கச் சிந்து.

முத்தமிழ் க்ஷேத்திரமெனும் மதுரை,
எம். இ. எம். பாஸ்கரதாஸ் அவர்களால்
புகழ்ந்திசைக்கப்பெற்றது.

மதுரை, சாயாக்கடை வியாபாரம்,
சார் என்ற கருப்பணக்கோனார் அவர்களால்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை] ரிஜிஸ்டர் காப்பி ரைட். [அணா 1.

உ

சிவமயம்.

வந்தேமாதரம்.

21 APR 1938
MADRAS

மில் தொழிலாளர் சங்கச் சிந்து.

வெண்பா.

உலகினிற்கோர் திலகமதாய் உற்பவித்த நற்பொருளே
கலைமகளும் மலைமகளும் கைதொழுக—பல கலைக்கும்
முன்னிற்க வேவந்த மூலப் பழமறையே
என்முன் நிற்கவா யிசைந்து.

சந்திர சூரியர் போம் என்ற மெட்டு.

வந்தேமாதர மெனும்
மந்திரமே நமக்கு
வாழ்வுக்கோ ராதாரமே

இந்தநற் சுதந்திரம்
சொந்தமே யானல்
யாதொன்றும் வேண்டாம்.
தேசத்தலைவரான ஸ்ரீ மான்கள் யாவரும்
சிறைபுகந்தனர் வொற்றுமைப்பதற்காய்
மாசற்ற நமது பாரதமக்களான தொழிலாளரே
யாதொன்றும் மருப்புரையாதிருப்பீர்
ஒற்றுமையே நமது
முற்றும் நம் கோரிக்கை
உண்மையா மிதுவறிவீரே
திட்டமாய் நமது
கட்டளைப்படியாமே
ஜெய ஜெய பேரியடிப்போமே.

நொண்டிச் சிந்து.

ஐயா ஒரு செய்தி கேளுங்கள்—மதுரை
ஆர். வி. மில்த்தொழிலாலர்கள் அடிமைத்தனம்
அடிமைத்தனம்
வர வர மிஞ்சிப் போச்சு—மில்லில்
வழக்கமில்லாத பெரும் குழப்பமாச்சு (ஐயா ஒரு)
முன்னிருந்த நிலைமை போச்சு—இரண்டு வாரம்
ஊடோட்ட திரேகமெல்லா மிளைத்துப்போச்சு
இளைத்துப் போச்சு
கைகாலயர்ந்து போச்சு—இரத்தம்
கண்ட கண்டவிடமெல்லாம் குன்றிப் போச்சு
குன்றிப்போச்சு

பல ஈன உடலாச்சு—இவ்வுடலில்
பலனென்ன வென்று மனம் விடலாச்சு
விடலாச்சு
இனி இரண்டாம் பாகமதிலே—இதிலும்
இனிமையாய் விரிவாக எடுத்துரைப்போம்
எடுத்துரைப்போம். (அய்யா ஒரு)

வாழ்வை நம்பாதே மனமே-என்ற மெட்டு.

எத்தனை நாளுழைப்போம் —சிவமே
எத்தனை நாளுழைப்போம்
இத்தனை நாளாயுளைத்துளைத்துமில்லால்
என்ன சுகமடைந்தோம்
என்ன சுகமடைந்தோம்
மனமுடைந்தோம்
துயரடைந்தோம். (எ)

குத்திருமல் காசம்பித்த நோயால்வுடல்
மெத்தவே நாம் மெலிந்தோம்
மெத்தவே நாம் மெலிந்தோம்
அகந் தளர்ந்தோம்
தினம் நடந்தோம். (எ)

சித்த வைராக்ய வுத்தம காந்திஜீ
சித்தப்படி நடப்போம்
சித்தப்படி நடப்போம்
தினம் படிப்போம்
கொடி பிடிப்போம். (எ)

கண் வாய் செவி மூக்கு யெல்லாம் நுளைவது
காற்றடித்த பஞ்சு
காற்றடித்த பஞ்சு
அது நஞ்சு
அதாலஞ்சி (எ)

கட்டத்துணியில்லை கஞ்சியில்லை ஆதிக்
கடவுளே ஆர். வி. மில்லால்
கடவுளே ஆர். வி. மில்லால்
தொழிலேபல்லால்
அதுவுமல்லால் (எ)

இப்பெருமுத்தியோகம்
எப்பவும் நமக்குத்தானென
சதமுண்டா
தானென சதமுண்டா
எழுத்துண்டா
தொண்டுக்குத் தொண்டா (எ)

பித்தம் பிடித்த பெருவாயர்க்கு நல்ல
பெருத்த வுத்யோகம்
பெருத்த வுத்யோகம்
இனத்துரோகம்
இது பாவம் (எ)

இத்தொழில் மாறினும் மெத்தொழிலுமிந்த
இகத்திலே யில்லையா
இகத்திலே யில்லையா
இதோர் தொல்லையா
பதிலில்லையா (எ)

உத்தமத் தலைவ ரெத்தலமில்லுக்கும்
ஒற்றுமைக்கேயுளைப்பு
ஒற்றுமைக்கேயுளைப்பு
நல்ல பிழைப்பு
தருவார் நமக்கு (எ)

உலக திலக எம் யி யம் பாஸ்கரன்
ஓதிடும் நற்கவியே
ஓதிடும் நற்கவியே
அதோர் நிதியே
அரிமதியே (எ)

கண்ணபிரானேன்ன என்ற மெட்டு.

திருமதுரை ஆர். வி. மில்லில்
ஜீவனம் செய்ய நாடி
அயலூரை விட்டு ஓடி--வந்து
தியங்குதையோ ஜனங்களெல்லாம்
கோடான நற்கோடி. (தி)

மாடு ஆடு விற்கத் தரகு
மண்டிலே யுண்டாச்சு--அதுபோல்
மனிதற்காச்சு—அந்த
மகாலோபிச் சண்டாளர்கள்
லஞ்சம் பெறலாச்சு. (தி)

ஏகை தயை தாக்ஷண்யக்குண
மென்பதேயவர்க்கில்லே—அதால்
வரும் பெருந்தொல்லே—என்

றரியாமலே செய்கிறார்கள்
சகிக்கவொன்று சல்லே (நி)

கங்காணியான மேஸ்திரிகளே
கதையொன்றறையக் கேளும்—நல்ல
காரியங்கள் போலும் கள்ளக்
கமிஷன் வாடிக் கைகள்
கைமுதல்தான் போலும். (நி)

உங்கள் பாட்டன்பூட்ட னிடத்தில்பெற்ற
கடனு சிறுகச் சிறுக-நாங்கள்
உழைத்தகாசில் தருக
அந்தப்பரமனே தருவார் கூலி
பலன்கள் மெத்தப்பெருக (நி)

மணி ஐந்தாக சங்கடிக்க
மனமக்களோடெழுந்து—தலே
விரிகோலமாய்த் திரிந்து—அன்ன
ஆகாரம் புசியாமலே
அதிவிரைவாய்ப் பரிந்து (நி)

இனிமேல் உங்கள் வரிசையெல்லாம்
ஏராது வீண் பேச்சு—நீங்கள்
எடுத்த கச்சி போச்சு—இனி
இத்துடனே வாலொடுக்கி
இருந்தால் நலமாச்சு (நி)

கமிஷன் வாங்கும் மாஸ்டர்களின்
கையிருப்பு போச்சு—பெரும்

கவலைகளுண்டாச்சு—இந்தக்
காலத்திலே வரதராஜு நாயுடுவா
லிப்பேச்சு (தி)

இஞ்சினோட பஞ்சுவேலை
ஏகமாகச் செய்ய—பா
லுண்ணுதமதலை னைய்ய அதை
எடுத்துப் பால்கொடுக்க நேர
மில்லா தாகுதையோ (தி)

வடித்து மிஞ்சிய கஞ்சியைக்
குழந்தை வயிற்றுக்காகப் புகற்ற—அது
உட்கொள்ளாது திகட்ட—வுயிர்
போகுந் தருணம்—மாதானவள்
ஓடியே பால் புகற்ற (தி)

டயம் கீப்பர் ரையிட்டர்களுக்கு.
தலைமை வுத்யோகமாச்சு—டேயப்பா
தலைகீழாகப் போச்சு—அவர்கள்
தந்திர மந்திர யிந்திர ஜாலம்
வெட்டவெளியாச்சு (தி)

வித்தகர்கள் தாழ்பணி
விவேக ஞான பாத்திரம்—ஹரி
ராமபிரான் கோத்திரம்—அதில்
விதரணையா பெம் இயம்
பாஸ்கரன் கூடல் க்ஷேத்திரம். (தி)

சிதையம்மன் விலாஸ்
இந்து சாயா ஓட்டல்.

வடக்குமார்ட்டு புதுத்தெரு, கடைசி

டீ. வீ. எஸ். பக்கம்.

காலை, புரட்டா, குருமா, இட்லி,

11-மணி முதல் இரவு 11-மணி வரை,

குஷ்கா சாப்பாடு சூடாக அணா, 0—1—0.

முட்டை, ஜாப்ஸ், வருவல், எந்த நேரமும்,

சூடாக கிடைக்கும்.

எல்லோரும் வந்து ஒரு முறை சாப்பிட்டு

ஆனந்திக்க வேணுமாய்க்

கேட்டுக் கொள்கிறேன்.

சார் என்ற **கருப்பணக்கோனர்,**

மானேஜர்.

ஸ்ரீ ஜெகதாம்பாள் பிரஸ், சிம்மக்கல் ரோடு, மதுரை.—38.

உலகப்பிரசித்திபெற்ற புகழோங்கிய

மதுரை வி. கே. அன் சன்ஸ் அவர்கள்

வ மு

511

ஆடுதென் மார்க்கு 511 நிர். சோப்பையும்

வி. கே. தில்கூஷ் தாம்பூலத்தையும்

அர்ஜுன பாக்குத்தூளையும் சதாகாலமும்

உபயோகப்படுத்துங்கள்.